1970 நவம்பர் 28]

line between Trivandrum and Tirune'veli (via) Nagercoil and that the traffic survey has commenced. He requested that instructions to officers concerned be issued for co-operation.

Priority has not been assigned. But we have been pressing the Centre to take it up early.

திரு. அ. லெ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, கடந்த 20 ஆண்டுக் காலமாக அந்தப் பகுதி மக்களிடையே இந்தக் கோரிக்கை இருந்து வருகிறதே, இதை விரைவில் நிறைவேற்றுவதாக, பாராளு மன்ற இடைத்தேர்தல் நடந்தபொழுது ஒரு வேட்பாளர் கூறினாரே, அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டாரே. வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் அவர் இதற்கு முயற்சி எடுத் திருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்தத் திருநெல்வேலி நாகர்கோவில் வழியாக இரயில் பாதை வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் பலமுறை மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறது. ஆனால் சுமார் ஒரு மாதகாலத்திற்கு முன் மத்திய இரயில்வே அமைச்சரவர்கள் பேசும்பொழுது 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடுகளில் எந்தப் பகுதியிலும் புதிதாக இரயில் பாதைகள் இல்லை என்ற முறையில் பேசியிருக்கிறார்கள். எனவே, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே தமிழ்நாட்டிலே அல்லது மற்ற சதர்ன் ஸ்டேட்ஸிலே புதிய பாதை அமைக்கப் போவதாகத் தெரியவில்லை. ஆகவே, இதைச் சுட்டிக்காட்டி, அவசியம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை அமல் படுத்த வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஏற்கெனவே கைவிடப்பட்ட திட்டம்தான். மறுபடியும் பரிசீலனை செய்து எடுத் துக்கொள்ளப்பட்டு ரயில்வே வாரியத்தால் சர்வேக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. நம்முடைய அரசும் அவ்வப்பொழுது வற் புறுத்தி வருகிறது.

கடலூர் துறைமுகம்.

* 55 வினா.—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் துறைமுகத்தை ஒரு பெரிய துறைமுகமாக மேம்படுத்துவது தொடர்பாக மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) கடலூர் ஒரு இடைநிலைத் துறைமுகம் (Intermidiary Port) இதை மேம் பாடு செய்ய வேலை நடந்து வருகிறது. அதனை ஆழ்கடல் துறை முகமாக ஆக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

[1970 நவம்பர் 28

DR. H. V. HANDE : May I know whether it is a fact that some time ago the Hon. Chief Minister met the Chairman of the Mineral and Metals Trading Corporation and appealed to him to increase the Corporation's shipment of iron ore through the Cuddalore Port and whether, by way of respect to the request of the Chief Minister, has he taken any steps to divert from Madras Port and export a larger quantity through the Cuddaolre Port?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற மெடல் கார்ப்பரேஷன் பிரதிநிதிகள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். பிறகு என்னையும் சந்தித்தார்கள். கடலூர் துறை முகத்தை மேம்பாடு அடையச் செய்ய வேண்டிய வேலையைத் துரிதப் படுத்தும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன்படி துரிதப்படுத்தப் பட்டு வருகிறது. இது ஒரு கோடி முப்பத்தி ஒன்பது லட்சம் ரூபாய் செலவில் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : கிழக்குக் கடற்கரை ஓரப் பகுதி யில் நமக்குப் பெரிய துறைமுகங்கள் இல்லாத காரணத்தால் மறு பரிசீலனை செய்து கடலூர் துறைமுகத்தை மேஜர் போர்ட் ஆக்க வேண்டுமென்று நம்முடைய அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்பதை நான் நன்றாக உணருகிறேன். அந்தத் துறை முகத்தில் கப்பல் வெகுதூரத்தில் நின்று அதிலே ஏறிச் சென்று மிகவும் சங்கடப்பட்டவன் நான். ஆனால் இப்போது அதை இடை நிலைத் துறைமுகமாக ஆக்குகின்ற வேலை முடிந்த பிறகு மேஜர் போர்ட் ஆக ஆக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

THIRU K. VINAYAKAM : In the conversion from an intermediate port to a major port, what exactly are the impediments which the Government is beset with?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இந்தக் கடலூர் துறை முகம் இருக்கின்ற பகுதி புயல் வீசும் பகுதி. தூத்துக்குடி துறை முகம் இருக்கும் பகுதியானது புயல் பாதுகாப்பு உள்ள பகுதி. ஆகவே, தூத்துக்குடி துறைமுகத்தை மேஜர் போர்ட் ஆக அமைக் கும் வேலை நடந்து வருகிறது: வருகின்ற மார்ச் 31-ம் தேதி அளவில் சிறு சிறு கப்பல்கள் இங்கிருந்து புறப்படும் வகையில் துறைமுகத்தை அமைக்கும் வேலை வேகமாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. கடலூர் துறைமுகத்தைப் பொறுத்தவரையில் இண்டர்மீடியரி போர்ட் ஆக ஆக்குவது என்று 1 கோடி 39 லட்சம் ரூபாயில் முடிந்து விடுகிறது. ஆனால் மேஜர் துறைமுகமாக ஆக்க வேண்டு மென்றால் அதைப் போல் எவ்வளவோ மடங்கு அதிகமாகச் செல வாகும் என்பது மட்டுமல்ல, புயல் வீசுகின்ற (சைக்ளோன் ஏரியா) பகுதியில் இருப்பதால் ஆழ்ந்து சிந்தித்துச் செய்ய வேண்டிய காரிய மாக இருக்கிறது.

1970 நவம்பர் 28]

DR. H. V. HANDE : While we are very happy to learn from the Hon. Minister that a crore and odd rupees has already been earmarked, may I know the amount spent so far and has the Government any intention to introduce a short passenger service from Madras to Cuddalore so that it will divert to some exhent the heavy road taffic, as it will be economical and will also provide a turist attraction?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இதிலே, இன்னும் எவ்வளவு செலவு செய்ய வேண்டிய பாக்கி இருக்கிறது என்ற விவரம் கைவசம் இல்லை. அப்படிச் செலவு செய்ய வேண்டியிருக்குமானால் தமிழக அரசு சிறு துறைமுக நிதியிலிருந்து முன்பணமாகச் செலவு செய்து மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ள வகை இருக்கிறது.

பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய விதமாக துறைமுகத்தை மாற்ற வேண்டுமென்று சொன்னார்கள். தற்போது சரக்குகளை ஏற்றிச் செல்லும் வகையில்தான் வேலை நடந்து வருகிறது. பிரயாணிகள் நாகப்பட்டினத்தில் ஏறி கிழக்கு நாடுகளுக்குச் செல்லுகிறார்கள்

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : கடலூர் துறைமுகப் பகுதி சைக்ளோன் ஏரியா, தூத்துக்குடி பாதுகாப்பான பகுதி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாகப்பட்டினம் துறைமுகப் பகுதியும் புயல் வீசும் பகுதியாக இருப்பதால் அதை அபிவிருத்தி செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : சைக்ளோன் ஏரியாவாக இருக்கக்கூடிய பகுதியை ஆழ்கடல் துறைமுகமாகக் கட்ட அதிகச் செலவாகிறது. ஆகவே, நாகப்பட்டினம் துறைமுகம் கூட இடைநிலைத் துறைமுகமாகத்தான் இருக்கிறது. இப்போது கடலூர் துறைமுகத்திற்குச் செலவாகிற ஒரு கோடி 39 லட்சம் ரூபாய் செலவு பூராவும் மத்திய அரசிடமிருந்து பெற்றுச் செலவு செய்வதாகும் நாகப்பட்டினம் துறைமுகத்தையும் பெரிதாக்க செயற்குறிப்பை தூத்துக்குடி துறைமுக வேலை முடிந்த பிறகு எடுத்துக் கொண்டு மத்திய அரசுக்குத் தெரிவிக்கலாம்.

பாசனத் திட்டங்களுக்கு நிதி

* 56 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 370 கோடி ரூபாய் செலவில் சிறு பாசனத் திட்டம் ஒன்றை தமிழ்நாடு அரசு தயாரித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம் நீங்கலாக தமிழ்நாடு முழுவதும் மூன்று லட்சம் கிணறுகளும், குழாய்க் கிணறுகளும் தோண்டி பம்ப்